# சுவடு

CHRISTIAN COLLEGE KOPAY

FOR TRUTH & JUSTICE

## வெளியீடு – 12

பழைய மாணவர் சங்கம்,

யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

கோப்பாய்.

**27.12.2013**

# யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் 2012/2013
## நிர்வாக சபை உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| **போஷகர்** | :- | திரு.நா.சிவநாதன் |
| **தலைவர்** | :- | திரு.க.இ.இராசசேகரம் |
| **உபதலைவர்கள்** | :- | திரு.க.ஸ்ரீஸ்கந்தராசா |
| | | திரு.க.விநாயகலிங்கம் |
| | | திரு.இ.அம்பலவாணர் |
| | | திரு.கா.திருச்செல்வம் |
| | | திரு.இ.இராஜமகேந்திரன் |
| | | திருமதி.வி.பாலதாசன் |
| **செயலாளர்** | :- | செல்வி.ம.கந்தையா |
| **உ.ப.செயலாளர்** | :- | திரு.ம.நிரோசன் |
| **பொருளாளர்** | :- | திரு.இ.கிருஷ்ணகுமார் |
| **நிர்வாக சபை உறுப்பினர்கள்** | | |
| | | திரு.வே.சண்முகலிங்கம் |
| | | திரு.சு.திருநாவுக்கரசு |
| | | திரு.ஜே.ஜோன்கியூபேட் |
| | | திரு.சி.சுரேஸ்குமார் |
| | | திரு.கு.துஷ்யந்தன் |
| | | திரு.செ.தவேஸ்வரன் |
| | | திருமதி.இ.அருந்தவநாதன் |
| | | திருமதி.ய.முரளிதரன் |
| | | செல்வி.நெ.காயத்திரி |
| | | செல்வி.ஞா.நிருத்திகா |
| **பத்திராதிபர்** | :- | திரு.சி.சிவலிங்கம் |
| **கணக்காய்வாளர்** | :- | திரு.க.இராமச்சந்திரன் |

**பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் :-**

திரு.ஐ.சிவலோகநாதன், திரு.இ.இராசதுரை,
திரு.ச.அருந்தவரட்ணம்

# அமரத்துவ அதிபர்கள்

| | | | |
|---|---|---|---|
| திரு.G.S.செல்லையா | 01.01.1945 | – | 30.04.1951 |
| திரு.T.W.இராசசேகரம் | 01.05.1951 | – | 31.07.1957 |
| திரு.E.C.A.நவரட்ணராசா | 01.09.1957 | – | 27.12.1963 |
| திரு.E.K.சண்முகநாதன் | 28.12.1963 | – | 31.05.1971 |
| திரு.M.கார்த்திகேசன் | 01.06.1971 | – | 31.12.1971 |
| திரு.S.சிவசுப்பிரமணியம் | 01.01.1972 | – | 11.07.1973 |
| திரு.S.செல்வரட்ணம் | 07.10.1980 | – | 27.10.1983 |
| திரு.N.சிவகடாட்சம் | 19.08.1996 | – | 11.10.2005 |
| திரு.S.கந்தசாமி | 01.09.1973 | – | 26.12.1974 |

# சுவடு

| | இதழ் வெளியிடப்பட்டது | ஆசிரியர் |
|---|---|---|
| 1. | 27.12.1997 | திரு.S.K.தங்கவடிவேல் |
| 2. | 27.12.1998 | திரு.ஆ.ஜெயபாலசிங்கம் |
| 3. | 20.02.2002 | திரு.இ.ரகுமார் |
| 4. | 27.12.2004 | திரு.S.K.தங்கவடிவேல் |
| 5. | 27.12.2005 | திரு.S.K.தங்கவடிவேல் |
| 6. | 27.12.2007 | திரு.சி.சிவலிங்கம் |
| 7. | 27.12.2008 | திருமதி.உ.சுரேந்திரகுமார் |
| 8. | 27.12.2009 | திரு.சி.சிவலிங்கம் |
| 9. | 27.12.2010 | திரு.சி.சிவலிங்கம் |
| 10. | 27.12.2011 | திரு.சி.சிவலிங்கம் |
| 11. | 27.12.2012 | திரு.சி.சிவலிங்கம் |
| 12. | 27.12.2013 | திரு.சி.சிவலிங்கம் |

# அதிபரின் உள்ளத்திலிருந்து....

எமது கல்லூரி 160 ஆண்டு வரலாற்றில் பல சாதனைகளைப் படைத்துள்ளது. நாம் கடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்க்கின்றேன். சிறப்பாகப் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், நல்ல நிலையில் உள்ள பழைய மாணவர்கள், கல்லூரிக்காக அரும் பணியாற்றிய ஊழியர்கள் என்று பலரையும் நினைக்கின்றேன். அவர் தம் பணியை நினைக்கின்ற போது உள்ளம் உவகை கொள்கின்றது. நல்ல உள்ளங்களின் உழைப்பால் உயர்ந்து 160 ஆண்டுகளைக் கடந்து கல்விப் பணியாற்றிவரும் எமது கல்லூரியில் அதிபராய் இருந்து அமரத்துவமடைந்த அதிபர்களை நினைவு கூரும் முகமாக மார்கழி மாதம் 27ம் திகதி அமரத்துவ அதிபர் தினம் வருடம் தோறும் கொண்டாடப்படுகின்றது.

எமது கல்லூரியின் பரீட்சைப் பெறுபேறுகள். இணைபாட விதானச் செயற்பாடுகள், உயர்கல்வி அனுமதி என்பன பிரபல கல்லூரி களுக்கு இணையாகக் காணப்படுகின்றன. கல்லூரியின் பௌதிக வளங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன, மண்டபங்கள் வர்ணங்கள் பூசப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. பூங்கன்றுகளுக்கான பாதுகாப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. கல்லூரிக்கு தெற்கு, மேற்குப் பக்கத்திற்கு சுற்றுமதில் கட்டப்பட்டுள்ளது. 125 ஆவது ஆண்டு நினைவு மண்டபம் வர்ணம் பூசி புனரமைக்கப்பட்டுள்ளது.

எமது கல்லூரி ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் 2ம் கட்டமாக உள்வாங்கப்பட்டு அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக் கப்படவுள்ளதுடன் **"மகிந்தோதய"** திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப

ஆய்வுகூடம் அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவ் வருடம் **"சுவடு"** சஞ்சிகை வெளிவருகின்றது. இப்பணியில் பங்களிப்புச் செய்த அனைவரையும் பாராட்டி நன்றி தெரிவிக்கின் றேன். 160 வருடம் கடந்து வந்த பாதச்சுவடுகள் இனிவரும் காலங்களி லும் வழிகாட்டும். கல்லூரியின் மேலான வளர்ச்சிக்காக நாம் அனைவரும் உழைப்போமாக.

நன்றி.

**திரு. க. இ. இராசசேகரம்**
**அதிபர்**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**
**கோப்பாய்.**

# படித்தால் மட்டும் போதுமா?

அடியவனுக்கு அறிவை ஊட்டிய கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஏற்பட்ட அனுபவங்களைத் தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் ஆனந்தமடைகின்றேன்.

**"கற்றதனாலாய பயன்என் கொல் வாலறிவன் நற்றாள் தொழா அர் எனின்"** என்னும் திருக்குறளினையும் கற்று உணர்ந்த வித்தையினை பிறருக்குத் தெரியப்படுத்தாதவன் உலகிலுள்ள பஞ்சமா பாதகங்கள் அனைத்தையும் செய்தவன் என்னும் கருத்தினையும் உடையவர்களுள் யானும் ஒருவன். இச் சந்தர்ப்பத்தில் பாரதத்தில் வரும் **"பாராளக் கர்ணனையும்"** என்ற அடிகள் நினைவில் வருகிறது. உலகில் ஒருசிலர் தாம் கற்ற வித்தையினைத் தவறான வழியில் பயன்படுத்தி தாமும் கெட்டு சமுதாயத்தினையும் கெடுத்துச் சென்றதனை எமது வாழ்நாளில் அறிந்திருக்கின்றோம்.

1961இல் 6ம் வகுப்பில் இருந்து 1970 மார்ச் 7ம் திகதி வரை எனக்கு அறிவை ஊட்டிய இப் பாடசாலையில் யான் பெற்ற அனுபவங்களைப் பட்டியலிடுகின்றேன்.

ஆரம்பக்கல்வியினை கோப்பாய் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்த காலத்தில் விளையாட்டுப்போட்டி நடைபெறும்போது இல்லக் கொட்டகைக்குள் தூங்கிக் கொண்டிருந்த என்னை 1961இல் இக் கல்லூரி விளையாட்டுப் போட்டிக்கான ஆரம்ப நிகழ்வுகள் இல்லத் தலைவர்களினால் முன்னெடுக்கப்படும் போது கல்லூரியின் "கேற்" கல்லூரி முடிந்ததும் மூடப்படுவதனால் கட்டாயமாக நானும் போட்டியாளர் தெரிவுக்கு உட்படுத்தப்பட்டேன். அன்று எனது வயதுக்

குழுவினருடன் போட்டியாளர் தெரிவில் தெரிவாகிக் கொண்டபோது எனக்கு ஏற்பட்ட ஆச்சரியம் என்னிடத்தில் இப்படி ஒரு தகைமை எவ்வாறு ஏற்பட்டது என்பதே. இது எனது முதலாவது அனுபவம்.

ஆண்டவனால் சிருஸ்டிக்கப்பட்ட ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு திறமை இருக்கத்தான் செய்கிறது. அதனை வெளிக் கொண்டுவரும் இடங்களில் கல்லூரி முதலிடத்தைப் பிடிக்கிறது.

கல்லூரியின் வகுப்பறை மட்டுமல்ல கல்லூரியின் சகல செயற்பாடுகளுமே கல்லூரிதான். ஆதலால் பெற்றோர் பிள்ளைகளை வகுப்பறையில் மட்டும் அடைத்து வைக்காமல் இதர கலைகளையும் கல்லூரி எனும் திறந்தவெளியில் பறக்கவிட வேண்டும். இதனால் பிள்ளைகள் தமது திறமைகளை உலகிற்கு அறிவிக்கக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பார்ட்சை என்றால் எம்மவர்கள் பிள்ளைகளுடன் படும்பாடு சிந்தித்தால் சிரிப்புத்தான் வரும். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பற்றியும் சித்தியடையாத மாணவர்கள் பற்றியும் நீங்களே சிந்தித்து அறிந்துகொள்ளுங்கள். பட்டம் பல பெற்று வாழ்விலே பட்டம் விடாதோர்களும் வகுப்பறைக் கல்வியிலே பட்டம் பெறாது வாழ்விலே கொடிகட்டிப் பறந்தோரும் உள்ளனர் அல்லவா? இது எதனால்? அது உங்கள் சிந்தனைக்குரிய ஒன்று. **"வாழ்வை சுமை என நினைத்தால் நாங்கள் வாழ நினைக்கலாமா?"**

எனது கல்லூரிக் காலத்தின் முற்பகுதியில் கணிதத்தினையும் உயர்தரத்தில் இரசாயனவியலையும் கற்பித்த காலஞ்சென்ற S.பொன்னுத்துரை ஆசிரியரின் கூற்று **"ராசா டொக்டராக வேணும் என்று நான் கேட்கவில்லை, படித்து ஒரு நல்ல நிலைக்கு வரவேணும் என்பதுதான் எனது விருப்பம்"** என்று கூறியதும் அவரின் சுருக்

கொப்பம் SP என்பதுவும் எனது காதுகளிலும் கண்களிலும் இன்றும் ஒலித்துக் கொண்டும் ஒளித்துக் கொண்டும் இருக்கிறது. அவர்தான் எமது **"விற்னி ஹவுஸ்"** ஆசிரியரும் கூட. தவிர எனக்கு 10.03.1970 இல் ஆசிரிய நியமனம் கிடைத்து அவிசாவளைக்குச் சென்றபோது **"உது உமக்கு ஏற்றதல்ல. வேறு முயற்சிகளை மேற்கொள்ளும்"** என எழுதிய கடிதத்தை நான் 1987இல் தவறவிட்டமை நாட்டின் அசாதாரண சூழ்நிலையாலேயே.

தவிர ஆரம்பத்தில் உயிரியலையும் உயர்தரத்தில் விலங்கியலையும் கற்பித்த காலஞ்சென்ற A.R.இராசையா மாஸ்டரை தினம் தினம் நினைத்து மகிழ்வேன். இவர்தான் எமக்கு **"ஹொக்கி"** பயிற்றுவிப்பாளரும் விளையாட்டுக்களின் பொறுப்பாசிரியரும் (Prefects of Games) ஆவர். பாடசாலை முடிந்தாலும் மாலை 6.30 மணி வரை விளையாட்டு மைதானத்திலேயே எம்முடன் இருப்பவர். தற்போது மாணவர்களும் சரி ஆசிரியர்களும் சரி எத்தனை பேர் பாடசாலை முடியுமுன் கேற்றைக் கடந்து ரியூசன் வகுப்பில் இருக்கிறார்கள். **"சிந்தித்தால் சிரிப்பு வரும் மனம் வந்தால் அழுகை வரும்"** வருடத்தில் 90 வீதமான நாட்கள் 6.30 மணிக்குப் பின்தான் அவரின் A10 கார் எமக்கு தாவரவியல் கற்பித்த ஆசிரியர் திருமதி.L.K.இராசையாவுடன் அவரின் தெல்லிப்பழை வாசஸ்தலத்திற்கு பயணத்தை ஆரம்பிக்கும். அதுவரை திருமதி. L.K.இராசையா அவர்கள் பாடசாலை அன்னையின் அரவணைப்பில் ஆசிரியர்கள் இளைப்பாறும் அறையினுள்ளே இருந்து அடுத்தநாள் கற்பிக்க வேண்டிய பாடங்கள் பற்றிய ஆராய்ச்சியிலே இருப்பதனை யாவரும் அறிவர். 1969 டிசம்பர் க.பொ.த (உயர்தர) பரீட்சையை எழுதுமாறு அவர் இடித்துரைத்தமை அப்போது எனக்கு எருமை மாட்டில் மழை பெய்ததாகிவிட்டது. இதனை நான் டிசம்பர் 1970க்கு முன்னரே உணர்ந்துவிட்டாலும் அது எனக்கு **"கண் கெட்ட பின்னே சூரிய நமஸ்காரம்"** போலானது. இதனை மாதா, பிதா, குரு,

தெய்வம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் எனது வாழ்க்கையில் ஒரு அனுபவமாகவும் கருதுகின்றேன். அன்று குருவின் சொற்படி நடக்காததால் நான் இன்றும் பல தோல்விகளைச் சந்திக்கிறேன். இருந்தும் அதனையும் ஒரு விளையாட்டாக –Sportive minds – ஆக எடுத்து தோல்விகளையும் வெற்றியின் முதற்படி என மனதைச் சமாதானப்படுத்துகிறேன். ஒரு பெரியவர் கூறியது போல "ஒவ்வொரு வருக்கும் வாழ்க்கையில் தோல்விதான் அதிகம்" என்பதனை நினைத்து மனதை சாந்தப்படுத்திக் கொள்வேன். இது விழுந்தவன் மீசையில் மண் பிரளவில்லை என்ற கூற்றுக்கும்.......?

அடுத்து எமது கல்லூரி வாழ்க்கையில் உயர்தர வகுப்புவரை பௌதிகவியல் கற்பித்த P.கந்தையா மாஸ்டரை எவ்வாறு நினைவு கூராது இருப்பது? அதாவது சினிமா என்றால் அதில் முற்காலம் தொட்டு தற்காலம் வரை N.S.கிருஸ்ணன் மதுரம், சந்திரபாபு, டனால் தங்கவேலு, E.V.சறோஜா, நாகேஸ், மனோரமா, செந்தில், கவுண்டமணி, வடிவேலு, சந்தானம் என வரும்போது ரசிகர்கள் மனம் குதூகலிக்கும். அதேபோல் கந்தையர் பௌதிகவியல் பாடத்துக்கு வாறார் என்றால் எமக்கும் கொண்டாட்டம்தான். இது சாதாரணதர வகுப்புக்கு பண்டிதர் கந்தையா மாஸ்டர் தமிழ் கற்பிக்க வருவதற்குச் சமம் என்று கூறினாலும் பொருந்தும். காலஞ்சென்ற P.கந்தையா மாஸ்டரின் கற்பித்தலின் திறமையினால் 1966, 1967களில் O/L எடுத்த எமது பிரிவுப் பாடசாலை மாணவர்களில் 99.99% ஆனோர் பௌதிகவியல் பாடத்தில் சித்தியடைந்தமை நெஞ்சில் நிறைந்தவை. வெண்கட்டியுடன் கரும்பலகைக்கு வந்தால் எமது மனம் தேன்கூட்டு ஈக்களாகி கந்தையா மாஸ்டரின் நெறிப்படுத்தலிலும் அதனுடன் கூடிய பகிடிகளிலும் தான் லயித்திருக்கும். அவர் நாம் சந்தித்த **"ஆயிரத்தில் ஒருவன்"** இவர்போல் இன்றிருந்தால் ரியூசன் வகுப்புக்களுக்கு சனம் இராது என்பது எனது கருத்து. பெற்றோர்களுக்கும் பண விரயமும்

ஏற்படாது. இதர.......... தொல்லைகளும் வராது. **"கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?**

தவிர உயர்தரத்தில் எமக்கு ஆங்கிலம் கற்பிக்க அன்றைய அதிபர் காலஞ்சென்ற E.K.சண்முகநாதன் அவர்களினால் நியமிக்கப் பட்ட காலஞ்சென்ற S.செல்வரட்ணம் மாஸ்டர் என்றால் அவரின் **"சோமசெற்"** கார்தான் எமது கண்ணுக்குள் வரும். இவர்தான் எமக்கு உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளரும் கூட. **"வட்டுக்கோட்டைக்குப் போற வழி எது என்று கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு"** என்று கூறும் அளவுக்கு ஆங்கில அறிவு எமக்கு. எமக்கு ஆங்கிலம் படிப்பித்த S.செல்வரட்ணம் மாஸ்டரின் கூற்று ஒன்று **"முதிரை மொக்கு களுக்கு ஆங்கிலம் கற்பித்தால் கூட அவை கொஞ்சம் விளங்கிக் கொள்ளும்"** என்பதே. அவ்வளவு ஆவல் எமக்கு ஆங்கிலத்தில் அப்போது. அதன் விளைவு 01.10.1970இல் எழுதுவினைஞர் நியமனம் பெற்று திருகோணமலைக்குச் சென்றபோது அங்கு எமது அலுவலகச் சிற்றூழியர்கள் ஆங்கிலத்தில் உரையாடியதும் நான் FORTY or FOURTY என உச்சரித்து எழுதத் தெரியாது திண்டாடியதும் இனிய நினைவுகள் அல்லவா? அன்றைய தினமே 'SUNDAY OBSERVER" பேப்பர் வாங்கி ONE, TWO, THREE பாடமாக்கியதும் நான் பெற்ற பிறிதொரு அனுபவ மாகும்.

எனது இவ் அனுபவங்களை தங்களுக்கு எடுத்துக்கூறி நானும் ஒரு **"தெல்லிப்பளைக் கேஸ்"** ஆவதல்ல எனது நோக்கம். கற்ற வித்தையை மதித்து துரியோதனன் பஞ்சபாண்டவருள் இளையவரான சகாதேவனிடத்தில் வந்து தருமரின் தலைவிழ நாட்குறித்துக் கொண்ட மையும் தொடர்ந்து போர் வராதிருக்க சகாதேவன் பாராளக் கர்ணனை யும்.......... என்று கூறியதையும் கிருஸ்ண பராத்மாவையும் கட்டிப் போட்ட கதையையும் இச் சந்தர்ப்பத்தில் கூறி நான் எனது கல்லூரி

வாழ்வினிலே வகுப்பறைக் கல்வியை மட்டும் கற்றதில்லை என்பதை யும் மேற்கூறிய ஆசிரியப் பெருந்தகைகளின் சீடனாக இருந்து அவர் களின் அறிவுரைகளிலும் நனைந்ததையும் நினைத்து இன்றும் உளம் குளிர்கின்றேன்.

அண்மையில் எமது 2013 பரிசளிப்பு தினத்தன்று எமது பழைய மாணவனான பிரதமவிருந்தினரிடம் சேர் நான் **"விற்னிஹவுஸ்"** இராசதுரை என்று கூறியபோது அவர் என்னை ஆட்கொண்ட தன்மை நெஞ்சம் மறந்திடுமா?

அண்மையில் ஒரு பௌதிக ஆசிரியரைச் சந்தித்தேன் கீரிமலை யில். அவர் காதலித்து திருமணமாகி ஒரு சில மாதங்களிலேயே மனைவியை இழந்து கிரியைகள் செய்ய கீரிமலைக்கு வந்தபோது அவரும் ஒரு உறவினராதலால் ஆறுதல் கூற நினைத்து சில வார்த்தை களை உளறினேன். அருகிலே முன்னைநாள் கணக்காய்வாளரும் தற்போது பிரதம கணக்காளராக கடமையாற்றுபவருமான ஒருவரு டன் வேறு சிலரும் நின்றிருந்தனர். அப்போது மனைவியைப் பறி கொடுத்த குறித்த ஆசிரியர் என்னைப் பார்த்துக் கூறினார் **"படிப்பிப்பது சுகம் - படிப்பது கஸ்டம்"** என்று. எனக்குத் தலைசுற்றியது. என்ன கூறுகிறீர்கள் படிப்பிப்பதற்கு எத்தனையோ நிறைய ஆயத்தப்படுத்த வேண்டும் - அதுவல்லவோ கஸ்டமானது என்று கணக்காளரிடம் கோரினேன். அப்போது அவர் கூறினார் **"இச் சந்தர்ப்பத்தில் படிப்பிப்பது சுகம் படிப்பது கஸ்டம்"** என்று. இது எனது இளைய மகளிலும் வயது குறைந்த ஒரு ஆசிரிய அறிவாளியிடம் கற்ற பாடம். இது எனக்குப் பிறிதொரு அனுபவமாகும்.

இவற்றை எல்லாம் கூறி தற்கால இளம் மாணவச் செல்வங் களுக்கு எனது பட்டறிவு என்னவென்றால் "வகுப்பறைப் படிப்பு மட்டும்

போதாது – இதர கலைகளிலும் பங்கேருங்கள். வெற்றி தோல்வி முக்கியமல்ல – பங்குபற்றுவதே பெரிது என மகிழுங்கள். அது உங்கள் வாழ்வை பெரிதும் உயர்த்தும்"

**"வேப்பமர உச்சியில் நின்று பேய் ஒன்று ஆடுது"** என்று இருக்காது **"துணிந்து நில் - தொடர்ந்து செல் - தோல்வி கிடையாது"** என்று எண்ணி **"நான் ஏன் பிறந்தேன்"** என்று கேட்டு வாழப் பழகுங் கள். நானும் 1968, 1969களில் சுகததாச ஸ்ரேடியம் வரை சென்றதில் பெருமையடைவதால் இன்று எனது இந்த 64வது வயதிலும் 70kmph / 80kmph வேகத்தில் மோட்டார் சைக்கிளில் ஓடி எனது பயணத்தை இலகுவாக்கிக் கொண்டிருக்கின்றேன். வாழ்வை விளையாட்டாக் குங்கள் – அது சுமையாகாது. **"பனை மரம் போல் வாழ்வோம்"** கோழி **முட்டையாக இருப்போம்" "யாவரும் இன்புற்றிருப்பதே யன்றி வேறொன்றும் யான் அறியேன்"**

**தங்களில் ஒரு பழைய மாணவன்**
**(இராசரத்தினம் இராசதுரை**

# தொழில் வழிகாட்டி

## *செல்வி. பாக்கியம் நன்னித்தம்பி மறைந்த ஆசிரியர்*

வலிகாமம் கிழக்கில் அமைந்துள்ளது கோப்பாய் கிராமம். நிலவளம், நீர்வளம் கொண்ட பெருமைக்குரியது. இதனால் விவசாயம் செழித்தோங்கிக் காணப்படுகின்றது. இக் கிராமம் பல வழிகளில் சிறப்புடையது. முதலாவதாக சங்கிலிய மன்னன் இறுதியாக ஓடி வந்து ஒழித்து இருந்த இடமாகும். "கோ" என்றால் அரசன். பாய்ந்து வந்து இருந்த இடம் இதனால் வரலாற்றுச் சிறப்புடையது எமது கிராமம். யாழ்ப்பாணத்தின் இருதயம் போன்றது கோப்பாய். கோப்பாய்க்குள் நுழைந்தால் நான்கு திசைகளுக்கும் செல்லக்கூடிய பாதைகளைக் கொண்டது. பிரதேச நிர்வாகத்தை மேற்கொள்ளும் பிரதேச செயலக மும் இங்குதான் அமைந்துள்ளது. இதனைவிட ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர் கலாசாலை, பயிற்சியை வழங்கி ஆசிரிய ராக்கும் கல்வியற் கல்லூரி, வரலாற்றுப் புகழ்மிக்க கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, சைவம், தமிழைக் காக்க நிறுவப்பட்ட நாவலர் பாடசாலை, கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாசாலை என்பன அமைந்து கல்வியால் பெருமை சேர்த்தன. தமிழறிஞர்கள் சபாபதி நாவலர் அவர்கள், பஞ்சாட்சரசர்மா அவர்கள், கந்தையா அவர்கள் சைவசமயத்தை நன்கு அறிந்த சித்தாந்தபானு சுப்பிரமணியக் குருக்கள் வாழ்ந்த பெருமைக்குரிய கிராமம் என்பதைச் சொல்வதில் பெருமை அடைகின்றேன். இத்தகைய சிறப்புக்கள் எல்லாம் ஒருங்கே பெற்ற கோப்பாய் கிராமத்தில் நன்னித்தம்பி தம்பதியினருக்கு சிரேஷ்ட புத்திரியாக 1931ல் பிறந்தார். அவருக்கு **"பாக்கியம்"** என்னும் நாமத்தைச் சூட்டினர் பெற்றோர்.

பாக்கியம் ஆசிரியர் அவர்கள் பிறந்த காலம் பெண் கல்வி முன்னெடுக்கப்பட்ட காலம். சமுதாயத்தில் ஆண்களும், பெண்களும்

இரு கண்கள். மாதா தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்றான் பாரதி. அடுப்பூதுவதுதான் பெண்களின் வேலையல்ல. அவர்களின் ஆளுமையும் வளர்க்கப்பட வேண்டும். 1931ல் டொனமூர் சீர்திருத்தத்திற்கு அமைவாக கல்வி அனைவருக்கும் வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. C.W.W கன்னங்கரா இலவசக் கல்வியை அறிமுகம் செய்தார். இதனால் கல்விக் கண்கள் திறக்கப்பட்டன. பெற்றோர் இத்தகைய சிந்தனைகளால் தமது பிள்ளை கள் கல்வி கற்பதற்கு பாடசாலைக்கு அனுப்பினர். அதற்கமைவாக பாக்கியம் அவர்களும் கல்வி கேள்விகளில் சிறக்க வைக்க பெற்றோர் பாடசாலைக்கு அனுப்பினர். ஆரம்பக்கல்வியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் C.M.S பாடசாலையில் பெற்றார்.

தொடர்ந்த காலங்களில் தனது கல்வியை நாவலர் பெண்கள் பாடசாலையில் பெற்றுக் கொண்டார். பெண்களுக்குரிய கல்வியாக றேந்தை பின்னுதல், தையல், பன்ன வேலை போன்ற பயிற்சிகள் அக் காலத்தில் பாடசாலையில் வழங்கப்பட்டது. இவரும் கைப்பணி கல்வி யினை சிறப்புறக் கற்றுத் தேர்ந்தார். இதனால் இவர் இக் கல்வியினைப் போதிப்பதற்காக முதலில் முல்லைத்தீவில் அமைந்துள்ள தனியூற்று கிராமத்தில் அமைந்த பாடசாலையில் 1951ல் பெற்றுக்கொண்டார். அப் பணியை அங்கு ஆற்றிய ஆசிரியர் அவர்கள் காரைநகருக்கு இடமாற்றம் பெற்று வந்தார். இங்கு வலந்தலையில் அமைந்துள்ள அமெரிக்கமிஷன் பாடசாலையில் கடமை ஆற்றினார். இங்கிருந்து 1980ம் ஆண்டு காலப்பகுதியில் சொந்த ஊரில் அமைந்த, தான் கல்வி கற்ற பாடசாலையில் ஆசிரியப் பணி புரிய இடமாற்றம் பெற்று வந்தார். இங்கு இவர் வந்த காலத்தில் சிறந்தமுறையில் கைப்பணி கற்பித்தார் என அறியக் கிடக்கின்றது. தும்புக்கைத்தொழிலைச் சிறப்பாகக் கற்பித்தார் என அறிய முடிகின்றது. துடைப்பம், கயிறு திரித்தல் என்பன முக்கிய இடம் வகித்தது. கல்வியின் நோக்கம் தான் கற்ற கல்வியின்

மூலம் ஒரு தொழிலைச் செய்ய வேண்டும் என்பதே. இக் கல்வியினைக் கற்ற மாணவர்கள் பயன் பெற்று இருப்பார்கள் என நம்புகின்றேன். இந்த வகையில் ஒரு தொழில் வழிகாட்டியாகவும் விளங்கியுள்ளார்.

தொழில்நுட்ப பாடம் இல்லாத பிற்காலத்தில் 6,7,8ம் வகுப்பு களுக்கு தமிழ், சமயம், சுற்றாடல் ஆகிய பாடத்தைக் கற்பித்தார். தனக்குக் கொடுத்த பணியைச் செவ்வனவே செய்வார். தனக்குத் தெரிந்தவற்றை அக்கறையுடன் மாணவர்களுக்குப் புகட்டுவார். நான் 1985ம் ஆண்டு இக் கல்லூரிக்கு வருகை தந்தேன். அப்பொழுது தமிழ் மன்றம் அமைக்கப்பட்டது. எனக்கு செயலாளர் பதவி ஒப்படைக்கப் பட்டது. அக்காலத்தில் தமிழ்த்தினம் பாடசாலையில் கொண்டாடப் பட்டது. இதனால் சகல பாடசாலைகளும் போட்டியில் பங்குகொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது. போட்டிக்கு மாணவர்களை இறுதி யாக அனுப்பும் பொறுப்பு என்னிடம் வழங்கப்பட்டது. போட்டிகளுக் குரிய தலைப்புகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும். அந்த நேரத்தில் ஆசிரியர் தனக்குக் கொடுத்த பகுதிகளுக்குத் தேவையான ஆலோச னைகளை அக்கறையுடன் என்னிடம் கேட்டு மாணவர்களுக்குச் சொல்லி கொடுத்து தனது வகுப்புத் தெரிவை உரிய நேரத்தில் என்னிடம் தந்து விடுவார்.

அவர் மாணவர்களிடம் அன்பாகவே பழகுவார். ராசா, மோனை என்று அழைத்து தாய்மைக்குரிய பாணியில் புத்தி புகட்டுவார். அதட்ட வேண்டிய இடத்தில் அதட்டி உரிய நேரத்தில் தனது கடமையை மிக ஒழுங்காகச் செய்த **"ஆசான்"** என்றே குறிப்பிடலாம். எல்லோருடனும் இனிமையாகப் பேசிப் பழகுவார். பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு வந்து செல்வார். இணைப்பாட விதானச் செயற்பாடுகளுக்கும் ஒத்தாசை புரிவார். பாடசாலை இந்துமா மன்றம், ஆசிரியர் கழகம் என்பவனற்றின் நிர்வாக அங்கத்தவராகவும் பணியாற்றி உள்ளார்.

பாடசாலையை விட்டுச் சென்ற பொழுதும் பாடசாலை நிகழ்வுகளில் பங்கேற்பார். பிள்ளை இது எங்களுடைய ஊர். பிள்ளைகள் கவன மாகப் படிப்பியுங்கோ என்று சொல்லுவார்.

ஆசிரியப் பணியுடன் மட்டும் அவரின் பணி நின்று விடவில்லை. சமூகத்தில் உள்ள பெண்களுக்கு வழிகாட்ட விரும்பினார். இதனால் மாதர் சங்கத் தலைவியாகவும் விளங்கினார். இதனால் தமது பகுதிப் பெண்களுக்கு உதவிகள் பெற்றுக் கொடுத்தார். இத்துடன் அவர் நின்று விடவில்லை. ஆலய நிர்வாகத்திலும் பங்கேற்றார். இதனால் ஆலய பரிபாலன சபையின் அங்கத்தவராகவும் விளங்கினார். எமது பகுதி யில் அமைந்துள்ள அறநெறிப் பாடசாலையினை அங்குராப்பணம் செய்த பெருமை இவருக்கே உரியது. இத்தகைய சேவை மனப்பாங்கு பொருந்திய ஆசானைப் பற்றி எழுதவில்லை என்று சிலர் அவருடன் கற்பித்த ஆசான்கள் என்னிடம் கேட்டனர். அதற்கமைவாகவும், அவர் நான் இப்பாடசாலையில் கல்வி கற்பித்த காலத்தில் அவர் தமிழ் மன்றச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்கியமையை நினைவு கூர்ந்து இக் கட்டுரையை எழுதினேன்.

இச் சிறப்புப் பொருந்திய ஆசான் இவ்வுலக சேவைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இவ்வுலக வாழ்வை நீத்து விட்டார். அவரது சேவைகள் இவ்வேளையில் நினைவு கூருவது பொருத்தமானது என நம்புகிறேன்.

**செல்வி.ம.கந்தையா**
**(முன்னாள் ஆசிரியர் ஓய்வுநிலை)**
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்.**

# Mr. G.S. Chelliah

Mr. G.S Chelliah who was residing at our Village ,Kopay was the first native principal of Kopay Christian College (Then it was named as KOPAY CMS School).After the Britishers had left the soil of Ceylon , the Anglican Mission (CMS Mission or Church of Ceylon Mission) took over some schools in the North and administered them. The Mission did the management very successfully. The Mission appointed efficient and eligible teachers and supervised them regularly. The officials visited the schools and fulfilled their needs.

We, the residents of Kopay were happy and proud of Mr Chelliah's appointment as the first native principal of CMS school Kopay. This school had only boys as students at first. There was also a school for girls as well .In Mr. Chelliah's tenure, both these schools were amalgamated. As the head of the school he worked with selfless devotion for the development and progress of the institution and by his great efforts it was up graded to Grade "C" school. Mr Chelliah took efforts to build up the traditions and prestige of the school .He managed the affairs with success. The foundations of successful education were laid during his time and today one cannot think of Kopay Christian College without remembering Mr G.S Chelliah and his hard work for the progress and development of the institution

Mr. Chelliah's success as the head of the school was chiefly due to his ability and capability .He also proceeded with the art of planning and with clever methods. He was a great administrator and a good disciplinarian. He was a gentleman with simplicity. The smooth running of the school from a Boys' school to an amalgamated Grade 'C' School was entirely due to the discipline and guidance exerted on the students by Mr. Chelliah. The old students of KCC who are holding high positions all over the world say that they are now in their positions and are leading successful lives because of the guidance and administration of Mr.Chelliah. They are so much loyal to him.

Mr. Chelliah helped the poor and the weak students with unstinting generosity .He had a good heart. He still lives in the hearts and minds of all those who studied and worked under him. All of them still offer deep respect, sincere affection and love with loyalty.

***B.S.A Ariaratnam***
***Retd. Teacher.***

# Mrs. S. Chelliah

Mrs. Selvi Chelliah was a very good teacher .She was a tall lady. I had a golden opportunity to learn Algebra and Geometry in Standard six at Kopay Christian College. She was very strict and she had a dynamic voice with high tone. She taught us discipline and punctuality as well,. Late comers had to stand up on their chairs for five minutes. This was a punishment given by her. We learnt good manners through her powerful words. She used to get angered off and on and we were like "The Village School master's students." (A poem by Oliver Gold Smith). "Pin drop silence" was maintained during her class time. she was our class teacher too. So, she took extra care for our studies and discipline. We would release a big sigh when she left the classroom after the end of the lesson. We would also breathe well at that time with great relief from a great pain.

However we realized our mistake and misunderstanding later on. She did all this for our benefits and progress .Then only we felt sorry. We regretted and appreciated her sincerity and her duty only after wards. She did all her best to mould and make us as "men" and create us as good citizens. She is indeed an unforgettable lady and was like a good and devoted mother. A teacher is indeed a second parent of every child and Mrs .Chelliah proved this very bravely and wisely. She passed away a few years back and I visited her before her death. When she saw me she hugged and kissed me and gave me some short eats and a cup of tea. She was very happy about my visit as she didn't see me for a long time. She showed her affection and love very warmly. Infact, my father late Mr. C.M Ariaratnam was on the staff of Kopay Christian College for over fifteen years. So, Mr and Mrs Chelliah used to visit us and we too used to visit them often. Hence, our family had a strong link with the Chelliah's family.

Mr and Mrs Chelliah will be remembered by everyone whom they have taught. Really they were great. They still live in the heart of every loyal student even now.

***B.S.A Ariaratnam***
***Retd. Teacher & a loyal student.***

# என்னை வளப்படுத்திய ஆசான்கள

பாடசாலை வாழ்க்கை என்பது எந்த ஒருவருக்கும் மறக்க முடியாத மகிழ்ச்சியான ஒரு காலமாகும். அவ்வகையில் எனக்கும் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் தரம் 6 தொடக்கம் 13 வரை கற்ற காலப்பகுதியில் அழியாத ஓவியங்களாக என் மனத்திரையில் பதிந்துவிட்ட நினைவுகள் ஏராளம். அவற்றில் நான் க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்ற, எனக்கு உகந்த முறையில் கல்வியறிவு புகட்டி மேல்நிலைக்கு உயர்வடைய செய்து வைத்த ஆசான்களை இங்கு நினைவு கூருகின்றேன்.

எமக்கு தாவரவியல் பாடத்தை அழகாக கற்றுத்தந்த திருமதி.க.ரட்ணசபாபதி ஆசிரியை என் மனதில் என்றும் நீங்கா இடம் பிடித்தவர். அவருடைய கண்டிப்பான தோற்றமும், கனிவான பேச்சும் பாடத்தைக் கற்பிப்பதில் அவருக்குள்ள ஆர்வமும் என்னை மிகவும் கவர்ந்திருந்தன. தாவரவியல் பாடத்திற்கான மணி ஒலிந்தவுடனேயே நாம் எமது அப்பியாச கொப்பிகளுடன் உயிரியல் ஆய்வுகூடம் சென்று விடுவோம். அங்குதான் எமக்கு கற்பித்தல் மற்றும் செய்முறைகள் நடைபெறும். நான் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்பதில் ஆசிரியை மிகுந்த அக்கறை காட்டினார். அவருடைய வழிகாட்டலி னால் கற்று தாவரவியல் பாடத்தில் A தரசித்தி பெற்று நான் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான போது ஆசிரியை மிகவும் பெருமித மடைந்தார்.

பௌதிகவியல் பாடத்தைக் கற்பித்த திரு.ந.சிவகடாச்சம் அவர் கள் எமது பாடசாலைக்கு காலடி வைத்தபோது நாம் உயர்தர வகுப்பு மாணவர்களாக இருந்தோம். அவர் எங்களுக்கு வகுப்பாசிரியராகவும் பௌதிகவியல் ஆசிரியராகவும் இருந்தார். பொலிவான தோற்றம்

கொண்ட அவர் குழந்தை உள்ளம் கொண்டவர். தனது கற்பித்தல் வேலைகளுடன் பல்வேறு நிர்வாக வேலைகளிலும் ஈடுபடுவார். எமக்கு பாடத்தில் சந்தேகம் வரும்போதெல்லாம் எம்மை தனியாகக் கூப்பிட்டு அதனைத் தெளிவுபடுத்துவார். நான் பாடசாலையை விட்டு விலகும் போது என்னை பல்கலையும் கற்கும் கூடமதை தரிசிக்க வேண்டும் என வாழ்த்தி அனுப்பினார். இவருடைய வாழ்த்தும் எனக்கு பலித்தது.

விலங்கியல் பாடத்தை செய்முறைகளுடன் கற்பிப்பார் சகாதேவன் ஆசிரியர். விலங்கியல் பாடமென்றாலே எங்களுக்கு சந்தோசம் தான். ஏனெனில் நகைச்சுவை கலந்த அவருடைய கற்பித்தல் பாணி, அது எமக்கு மிகவும் பிடித்திருந்தது. அவருக்கு தவளையை வெட்டிச் சோதிப்பது என்றால் மிகவும் விருப்பம். இதனால் அடிக்கடி தவளைகள் எமது பரிசோதனைச்சாலையில் கொலை செய்யப்படும். அத்துடன் ஆங்கில மொழியில் உள்ள விலங்கியல் புத்தகங்களை வாசித்து விளக்குவார். இதனால் எமது ஆங்கில அறிவையும் வளர்க்க கூடியதாக இருந்தது.

இரசாயனவியல் பாடத்தை இரசனையுடன் கற்பிப்பார் திருமதி.வரதன் ஆசிரியை. இரசாயனவியல் ஆய்வுகூடத்தில் எங்களு க்கு வகுப்பு நடைபெறும். அதிகம் பேச மாட்டார். ஆனால் ஆழமான அறிவு கொண்டவர். கற்பித்தால் மட்டும் போதாது அது மாணவருக்கு விளங்கவும் வேண்டும் என்பதற்காக கற்பித்த விடயங்களில் கேள்வி கள் கேட்டுப் பின்னூட்டல் செய்வார். அதனால் நாம் அவர் கற்பிக்கின்ற போது மிகவும் கவனமாக செவிமடுத்துக் கொண்டிருப்போம். இவ்வாறு எமது கல்லூரி வாழ்வில் நான் மறக்க முடியாத ஆசிரியத் தெய்வங்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருவதில் பெருமிதம் அடைகின்றேன்.

எனது கல்லூரி வாழ்வில் மறக்க முடியாத நாட்கள், கற்றல், கற்பித்தல் நிகழ்வுகள், கற்பித்த ஆசான்கள், பார்த்து ரசித்த கலை நிகழ்வுகள், பங்குபெற்ற போட்டிகள், சமய நிகழ்வுகள், பொதுச் சேவைகள், மெய்வன்மைப் போட்டிகள் என்று எமது எதிர்காலத்திற்கு களமமைத்த பல்வேறு விடயங்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம். என்றாலும் இடச்சிக்கனத்தை கருத்தில் கொண்டு என்னை கற்பித்த ஆசான்கள் வரிசையில் உயர்தர வகுப்பில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் பற்றி என் மனதில் இருக்கின்ற நினைவலைகளை இக் கட்டுரை ஊடாக நினைவுகூர்ந்துள்ளேன். இவ்வகையில் இப் பாடசாலையில் நான் ஒரு உயர்தர வகுப்பு உயிரியல் ஆசிரியையாக எனது ஆசான்கள் காலடி பதித்த தடம் வழியே நடந்து செல்லும் போது மிகவும் பெருமை அடைகின்றேன் எனக்கூறி கிடைத்த சந்தர்ப்பத்திற்கு நன்றி கூறி நிறைவு செய்கின்றேன்.

**இங்ஙனம்**

**திருமதி. கமலாவதி சுரேஸ்குமார்**

**(பழைய மாணவி),**

**உயிரியல் ஆசிரியை**

**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)**

# என் கல்லூரி வாழ்வில் நான்

ஆறாம் தரத்தில்
கிறீஸ்தவனுடன் தொடர்புபட்ட
செம்மண் விரித்த
பழமையாம் மலைவேம்பு
வாசலில் வரவேற்கும்
ஆங்காங்கே
புடைத்து நிற்கின்ற
சுண்ணக்கற்கள் காலை பதம் பார்க்கும்
கண்ணுக் கெட்டா தொலைவு வரை
எல்லை விரித்திருக்கும்
புளியமரமும் வேம்பும்
எங்கும் நிழல் பரப்பும்
மழைகாலம் வந்தால்
சிவப்புக் கொப்பளங்களாய்
தம்பளப் பூச்சிகள் அணிவகுக்கும்
கிறிஸ்தவ கல்லூரியில்
காலடி வைத்தேன்
அன்று முதல்
உயர்தரம் வரைக்கும்
என்னை கல்வி தந்து வளப்படுத்தி
பல்கலை எனும் படியேற வைத்த
கல்லூரி தாய்க்கு என்
கோடான கோடி நன்றிகள்
கல்லூரி என்ற
வளாக முற்றத்திலே

நட்டு வைத்த நல் மணம் பரப்பும்
பூச் செடிகளாய் எம் ஆசான்கள்
அன்னையைப் போல அரவணைத்து
தந்தையைப் போல் கண்டித்து
தோழனைப் போல் தோழ் தந்து
குருவாக இருந்து நல்
வித்தைகளை விதைத்து விட்டார்
இனிக்கின்ற தமிழ் மொழியை
கசக்கின்ற கணிதத்தை
புரியாத ஆங்கிலத்தை
புரிந்தும் புரியாத விஞ்ஞானத்தை
மகிழ்வு தரும் சமூகக் கல்வியை
ஆன்மா நிறைக்கும் சமயத்தை
வெறுத்தொதுக்கும் உடற்கல்வியை
தத்தமது திறமையாலே
எமக்களிக்க முயற்சி செய்தார்
எனினும்
எமக்கு புரியாததை
எப்படிப் புரிய வைக்க
புரிந்ததில் திறமை காட்ட
அவ்வாசான்களில் விருப்புக் கொண்டு
நற் பெயரை அவர்களுக்கு
எடுத்துத் தந்தோம் தப்பில்லை
அதற்காக ஏனையவர்கள்
எமக்காகப் பட்ட துன்பம்
மறப்பதொன்றும் எளிதில்லை
ஒருவாறாய் சாதாரண தரம்
தாண்டி உயர்வடைய

உயர்தரத்தில் கலைப்பிரிவில்
கவலையின்றிக் கற்றுக் கொண்டேன்
தனியார் கல்வி நிறுவனங்கள்
முளைவிட்ட காலத்தில் கற்றதனால்
அங்கு செல்ல வழியின்றி
இருந்த என்னை திடப்படுத்தி
ஒரு பிள்ளை வந்தாலும்
கற்பிப்போம் எனக்கூறி
கற்பித்த ஆசிரியை இன்று
அமரத்துவம் அடைந்து விட்டார்.
நல்லாருள் நல்லார் என
பட்டம் தந்தார் தமிழ் பண்டிதர்
சிறுவயதில்........
அழுது வரும் பிள்ளைக்கு
அருகிருத்திப் பாடம் சொன்னாலும்
பண்பட்ட ஆசிரியத்துவத்தை
காட்ட விட்ட ஆசிரியைகள்
என் செவிலித் தாய் ஆனவர்கள்
கண்டிப்பும் பழக்கமும் சொல்லி
பலாப்பழம் போன்ற ஆசான்
சொல்லித்தந்தவை, இன்று வாழ்விற்கு
வழி சமைத்த விடயங்களை
நன்றியுடன்
நினைக்கின்றேன்.

**செல்வி. ஹெ. காயத்திரி (பழைய மாணவி)**
**புவியியல் ஆசிரியர்**
**யா/ஊர்காவற்றுறை சிறிய புஸ்பம்**
**கொன்வென்ற்.**

# Our Duty Conscious English Master Late P.R.Ariyapooshanam of Captain Backus Lane, Manipay.

Late P.R.Ariyapooshanam Sir was appointed as an English teacher at Kopay Christian College by the former principal of st.John's College, Nugegoda and Kopay Chiristian college Late E.C.A. Navaratnarajah B.A.(Hons.) London in 1958. Before he joined Christian College, he taugh at st.John's College, Nugegoda.

Our English teacher was an all rounder. He taught Mathematics and English. He made his students learning these subjects with great interest. During his career as a teacher he gad been the boarding master, scouts master and also actively participate in all the extracurricular activities. He and Late Miss Poopathy Navaratnasingam teacher conducted country dance in 1959 according to English culture. It was a superb dance. He made the teachers, students and parents work as a community and brought the school from C Grade B Grade.

He took extra classes in the evenings without charging fees and conducted classes on weekends and holiday to get 99.9% excellent results from public examinations. He had no partiality between rich and poor children and weak clever students. He treated all alike.

He taught us grammar first and made us pass in exams with colours. He conducted many competitions and awarded us with prizes. For which I am proud to say that I too won a prize for general knowledge senior level.

During his period a lot of Christian College students were able to get jobs. Many became as teachers, government servants, medical staff, nurses, pharmacists, apothecaries, engineers and other categories of employment, He was an angle in disguise. His motto was 'Constructive mind; creative mind; preparation; presentation; participation; always stand for truth and justice, do your duty, work is worship.

May the Almighty God be with him and his spirit rest in peace and harmony ant to regain another birth to serve our children.

***Thankyou.***

***Subramaniam Kanagarajeswaran***
***Estate Medical Assistant cum Pharmacist,***
***JEDP***

# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் நற்பண்புகள்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆரம்பகாலத்தில் இருந்தும் அமரர் திரு.G.S.செல்லையாஅதிபரின்காலம்தொட்டுஅமரர்கள்இராஜசேகரம். E.C.A.நவரத்தினராசா, E.K.சண்முகநாதன், திரு.N.சிவகடாட்சம், திரு.K.ராஜரத்தினம், திரு.T.முத்துக்குமாரசுவாமி, திரு.அ.அகிலதாஸ் அதிபர்களின் காலம் வரை நற்பண்புகளுடனும் நற்றொழுக்கத்துடனும் மாணவர்கள் கல்லூரியின் பாரம்பரியத்தை சிறிதேனும் குறைவின்றி பாதுகாத்து வந்துள்ளனர். இதன் காரணத்தால் எமது பாடசாலை யிலிருந்து பலர் சிறந்த அரசியல்வாதியாகவும், பொறியியலாளர், வைத்தியர், கணக்காளர், ஆசிரியர், அரச, வங்கி, தனியார்துறையிலும் தமது செயல்திறனை எடுத்துக்காட்டியுள்ளார்கள். மேலும் தற்போது உள்ள அதிபர் திரு.க.இ.இராசசேகரம், பிரதி அதிபர்கள், ஆசிரியர் களின் ஒத்தாசையுடன் மாணவர்கள் நெறி தவறாது நற்பண்புடனும் நல் ஒழுக்கத்துடனும் தங்கள் கல்வியிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் கலை, கலாச்சார நிகழ்விலும் தங்கள் திறமையைக் காட்டி தங்களுக் கும், கல்லூரிக்கும் எமது தேசத்திற்கும் பெருமை தேடித் தருவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**நா.சிவநாதன்**
**போசகர் பழைய மாணவர் சங்கம்**
**ஓய்வுநிலை நுண்ணாய்வு பரிசோதகர்,**
**தபால் திணைக்களம்.**

# Memories of 1947 - 1950

My memory is running to the years 1947 to 1950. In 1947, I was studying in Grade III. The head teacher of the Primary Section was late Mrs.Solomon, who incidentally became our class teacher. A well built lady a strict disciplinarian, who cared the student' studies and their behaviour.

My class teacher in Grade VI (boys) was late Miss.Sivasithamparam, a modest teacher, well respected by all students. She was very kind towards the students.

Late Mrs.William was the class teacher Grade vi of girls was keen of the girls discipline and of their dress.

Late Mrs.Vergease taught us Science while late Mr.A.C.Selvarajah taught us Geography. All other teachers taught us to their best ability, maintaining discipline at all cost.

Late Mr.G.S. Chelliah was the principal then, a well dressed tall gentlement, clad in white dress, coat and tie, with a cane in his hand. Besides studies, was keen in discipline of the students. The main theme of the principal and teachers was mostly confined to discipline. No students could prosper in their life, without proper discipline, which was well maintained in our college. The good name of Kopay Christian College for Truth and justice which made us to reach good positions in all spheres of employment has to be maintained by all students, in the future.

***N.Sivanathan***
***Patron Old Students' Association***
***Retired Investigating Inspector Dept. of posts***

# ATRIBUTE

I'm pleased to send this message of remembrance for the Yearly magazine of 'Suvadu' published by the O.B.A of Kopay Christian College.

First of all I would like to thank Ms. Manonmany Kandiah, the secretary of O.B.A, for giving me the chance of writing a tribute to Late. Mrs. Ratnathikam. An American novelist Henry Brooks Adams said "A teacher affects eternity, he/she can never tell where his/ her influence stops. It's true because there is always an unforgettable teacher in everyone's life. In my case, it is late Mrs. Ratnathikam, who was my English teacher from Grade three to Grade eight. Before starting to write the wonders she made on studies, I'm proud to say that Kopay Christian College was once a treasure house of teachers of English. Many talented teachers taught English and other subjects. Their teachings were a perpetual topic of discussion whenever the past students meet. Mrs. Williams, Mrs. Sethukavalar, Mrs. Chelliah, Mrs. Arulraja, Mr. and Mrs. Rasaiah, Mr. Selvam Chelliah, Mr. Somasundaram and Mr P.Kandiah and Miss. P. Nagasundaram are some of the prominent figures, among many others, we always admire.

During English Day Competitions and school prize giving most of the programmes were in English. We had an identity for being the students of Kopay Christian College not only in English speaking competence but also in sports and other extracurricular

activities. We know and recognize that there were many teachers during 1960s, 1970s and 1980s who gave their hearts, minds and souls to nurture in us the things that they saw as vital to our education and important for our future.

In keeping this theme I want to share my views of the teaching of Late Ms. Ratnathikam, the Rosy teacher. She was a simple woman with asmile, whether in or out of the class, she wore a smile. She spoke very gently to anyone. She never used the word "NEE" in the Tamil singular form, that is' you'. I still remember her lively classes in the newly built Chelliah Block in the years 1968 and 1969. Before starting the lesson she would share a joke or a story and literally woke us from our slumber. Her clear voice rings in the ears even today.

When I was in the primary level she staged the English drama "The Three Bears" and I acted as a baby bear. Then in the secondary level she staged "Snow White and Seven Dwarf". I was the snow white. How happy were the days in her presence. I remember her enthusiasm and activeness on the stage. She would recite the poems and enact the stories. There was no way we could forget what we learnt in the English class. Many, many thanks to the manner in which Ratnathikam teacher taught and guided us. She never failed to identify something special in each student. There was no need to be topper to get noticed by her. She spotted our talents very easily and inspired us to polish our skills. She had encouraging phrases for each of us. I was good at reading poems

and whenever I participated in the contest, the practice she gave me would be the same whether I won or lost.

And finally I must not forget to say about her daughters Ranjini, Jeyanthini and Kumarini, who are settled abroad, too possess the same gentleness as their mother had.

After her retirement from service she resided near Kopay Navalar Vidyalaya where I got my first appointment. Whenever I had doubts I always rushed to her to clear it. I'm really proud to say that I wrote a nice tribute about her to the Palaly Teachers' College's EPOCH magazine in the year 1999 when I was a teacher trainee. She admired it a lot and blessed me. But unfortunately we missed her in September 2001. She touched our hearts and left us kindness. This is all what I can do for a good teacher and her sincere service.

May her good soul rest in peace!

***Thank You.***

***By: Mrs. M.J.S. Muthukumarasamy***
***(Lecturer, Palaly Teachers' College)***

# இணைபாட விதானச் செயற்பாடுகள்

இயற்கை அன்னையின் எழில் வனப்பையெல்லாம் கொண்டு விளங்கும் கோப்பாய் எனும் ஊரில் எமது பாடசாலையான யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இயங்கி வருகின்றது. இப் பாடசாலை மிஷனரி இயக்கத்தால் 1852ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. எமது பாடசாலையில் கிறிஸ்தவ மாணவர்கள் மட்டும் கல்வி கற்காமல் சைவ மாணவர்களும் கல்வி கற்கின்றனர். இப் பாடசாலை ஒரு கலவன் பாடசாலையாகும். இங்கு 58 ஆசிரியர்களும் 800 மாணவர்களும் கல்வி கற்கின்றனர். இங்கு தனிய கற்றல், கற்பித்தல் மட்டும் அல்லாது பல இணைபாடவிதானச் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. அவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

முதலில் விளையாட்டுப் போட்டியை நோக்குவோம் ஆனால் **"சுவர் இருந்தாற்றான் சித்திரம் வரைய முடியும்", "ஆரோக்கியமான மனம் ஓர் ஆரோக்கியமான உடலிற்றான் இருக்கும்"** என்பன முதுமொழிகள். இம் முதுமொழிகளுக்கேற்ப எம்மைத் தேகபலத்துட னும் மனோபலத்துடனும் வைத்திருக்க உதவுபவை விளையாட்டுக் களே. வாழ்க்கையில் ஏற்படும் பல பிரச்சினைகளைத் தீர்க்கவும், விளைவுகளைப் பெருந்தன்மையுடன் ஏற்கவும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை ஏற்படுத்தவும், தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் உறுதுணை புரிபவை விளையாட்டுக்களே. இவ்வாறு எமது பாடசாலையில் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்த ஆண்டுதோறும் மிக விமரிசையாக விளையாட்டுப் போட்டி கொண்டாடப்படுகிறது. இவ்வாறு விளையாட்டுக்களில் தெரிவு செய்யப்பட்டோர் சிலர் தேசியம் வரை சென்று பல பதக்கங்களைப் பெற்று எமது மாணவர்கள் பாடசாலைக்கு பெருமையையும் புகழையும் தேடித் தந்துள்ளனர். விளையாட்டுப்போட்டியின் நோக்கம் யாது எனின், ஒழுங்கு, கட்டுப்பாடு, வெற்றி, தோல்விகளைச் சமமாக

மதிக்கும் மனப்பான்மையையும், இவற்றை நன்குணர்ந்த மாணவர் களாகிய நாம் தேசிய விளையாட்டுக்களில் ஆர்வத்துடன் பங்கு கொள்ளுதல் வேண்டும். நமது தேசிய பாரம்பரியத்தைப் பிரதி பலிக்கும் தேசிய விளையாட்டுக்களின் வளர்ச்சிக்கு நம்மாலான பங்களிப்பினை வழங்குதல் வேண்டும். இதன்மூலம் நாட்டுக்குகந்த நற்பிரசைகளாக நம்மை உருவாக்கிக்கொள்ள முடியும். நாம் இத்தகைய பண்புகளை உருவாக்குவது எமது பாடசாலையில் இருந்து தான். எனவே மாணவர்களாகிய நாம் பாடசாலையில் மெய்வல்லுநர் போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும்.

அடுத்ததாக தமிழ்தினம் பற்றி நோக்குவோம். உலகச் செம் மொழிகளில் உயர்தனிச் சிறப்புடையது நம் தமிழ் மொழியாகும். இத் தமிழ்த்தினத்தை தமிழ் மன்றத்தில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் தலைமை வகித்து சிறப்பாகக் கொண்டாடுவார்கள். இத் தமிழ் விழாவில் கட்டுரை வரைதல், கவிதை எழுதுதல், பேச்சு, நடனம், நாடகம் போன்ற போட்டிகள் இடம்பெற்று பரிசில்கள் வழங்கப்படும். இதன்மூலம் பல திறமைகள் எம்முள் வளரும். பண்டிதர் நினைவாக தமிழ் தினத்திற்கான பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

அடுத்ததாக கணித, விஞ்ஞான தினம் பற்றிப் பார்ப்போம். புத்தம் புதிய கலைகள் பலவற்றுள் விஞ்ஞானக்கலை இன்று மிகச் சிறப்பாகக் கருதப்படுகிறது. இக்கலையைத் தெரிவு செய்வோரின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகவே உள்ளது. இக்கலையை விரும்புவோரின் தொகையை அதிகரிக்கும் பொருட்டு விஞ்ஞான தினம் கொண்டாடப் படுகிறது. இத் தினம் சிறப்பாக விஞ்ஞான மன்றத்தால் கொண்டாடப் படுகின்றது.

கணித, விஞ்ஞான தினத்தைச் சிறப்பாகக் கொண்டாட பழைய மாணவன் கலாநிதி திரு.க.நவரட்ணம் (சிரேஷ்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் – கல்வி, அவுஸ்திரேலியா) 2013ல் ரூபா 25,000 தந்து உதவி வழங்கி உள்ளார்.

அடுத்ததாக சிரமதானப் பணியைப் பற்றி நோக்கும் போது டெங்கு நோயை ஒழிக்கும் பொருட்டு எமது பாடசாலையில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஆசிரியர்களும், மாணவர் களும் இணைந்து மேற்கொண்டனர். மாணவர்கள் தமது வேலையை மிகவும் சுறுசுறுப்பாகச் செய்து முடித்தனர். இதன்மூலம் நாம் நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதனால் நாம் நோயின்றி வாழலாம். இது சிரமதானத்தின் மூலம் மாணவர்களிடையில் ஒற்றுமை, வேலையை பகிர்தல் போன்ற நற்பண்புகளை வளர்த்துக் கொள்கின்றனர். **"சுத்தம் சுகம் தரும்"** எனும் கூற்றுக்கு இணங்க நாம் சூழலைத் தூய்மையாக பாதுகாக்க வேண்டும்.

அடுத்ததாக நவராத்திரி விழா பற்றி பார்ப்போம். இவ்விழா சக்தியை நோக்கி வழிபடப்படுகின்ற விழா ஆகும். இது ஒன்பது நாட்களும் பாடசாலையில் உள்ள கோயிலில் பூசைக்குரிய வகுப்பு மாணவர்களால் சிறப்பாகச் செய்யப்படுகின்றது. கடைசி பத்தாவது நாளை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடுவார். இவ் விழாவின் போது பண்ணிசைப் போட்டிகள் நடைபெற்று பரிசில்கள் வழங்கப்படும். இது இந்துமா மன்றத்தால் கொண்டாடப்படுகிறது.

அடுத்ததாக ஒளிவிழாவை நோக்குவோம். இவ் விழா இயேசுவின் பிறப்பை ஞாபகப்படுத்துகிறது. இது மார்கழி மாதம் கிறிஸ்தவ மாணவர்களால் கொண்டாடப்படுகிறது. இதன் போது **"கரோல் கீதங்கள்"** இசைக்கப்படும். பல நடனங்கள், நாடகங்கள் இடம் பெறும். இது கிறிஸ்தவ மன்றத்தினாலும் கிறிஸ்தவ மாணவர்களாலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

எமது பாடசாலையில் இருந்து மாணவர்கள் கல்விச் சுற்றுலாவை மேற்கொள்கின்றார்கள். இது பாடம், இடம் பற்றிய அறிவை நேராகப் பார்த்து அறிய முடிகிறது. மாணவர்கள் பொது இடங்களில் எவ்வாறு வாழ வேண்டும் என்ற அறிவை வழங்குகிறது.

சாரணியம், ஒன்றுகூடல் போன்ற நிகழ்வுகளும் மாணவரின் தலைமைத்துவத்தை வளர்க்க உதவுகின்றது.

அடுத்ததாக பரிசளிப்பு விழாவைப் பார்ப்போம். ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படும் விழாக்களில் பரிசளிப்பு விழாவும் ஒன்றாகும். இங்கு பல மாணவர்களுக்கு பரிசு வழங்கப்படும். அதாவது பாடங்களில் முதலிடம் பெற்றவருக்கும் விளையாட்டில் தேசிய மட்டம் சென்றவருக்கும் கா.பொ.த.சாதாரண தரம், கா.பொ.த.(உ/த) சித்தி யடைந்தவருக்கும், பல்கலைக்கழகம் சென்றவருக்கும், தமிழ்தினப் போட்டிகளில் வெற்றி பெற்றவருக்கும், பாடசாலைக்கு ஒழுங்காக வருகைதந்த மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும். மாணவர் கள் உற்சாகத்துடன் வந்து பரிசில்களை வாங்கிச் செல்வார்கள். இவ் விழாவினால் இம்முறை பரிசில்கள் வாங்காத மாணவர்கள் அடுத்த முறை பரிசில் வாங்க முயற்சி செய்வார்கள். **“கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்கு தக”** எனும் கருத்துக்கிணங்க நாம் பாடசாலை வாழ்க்கையைப் பயனுள்ளதாகப் பயன்படுத்தி கல்வியில் முன்னேறு வோம்.

**ச.கயல்விழி** (9B)
**பிரிவு** II

# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் உயர்தர வகுப்பு

எமது பாடசாலையாகிய யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியானது ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. நீண்டகால வரலாற்றில் மிஷனரி நிர்வாகத்தின் கீழ் இக் கல்லூரி யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியின் சகோதர பாடசாலையாக விளங்கியது. அரசாங்கப் பாடசாலையாக மாற்றப்பெறும் வரை அவற்றிற்கு நிகராகப் புகழ் பரப்பி நின்றது என 1945இல் அதிபராகப் பணியாற்றிய திரு.G.S.செல்லையா அவர்கள் குறிப்பிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு மலர்ந்த எமது கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் உயர்தர வகுப்புக்களைப் பற்றி இனி நோக்கும் போது இது காலத்துக்குக் காலம் வெவ்வேறு துறைகளிலும் வளர்ச்சி அடைந்ததைக் காணலாம்.

1957ல் E.C.A நவரத்தினராஜா அவர்கள் அதிபராகப் பதவியேற்றுக் கொண்டார். இவர் பாடசாலையின் கல்வி வளர்ச்சியிலும், இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். இவருடைய காலம் பாடசாலை வரலாற்றில் ஒரு பொற்காலமாகக் கருதப்படுகின்றது. பாடசாலையை மேலோங்கச் செய்வதற்காக கா.பொ.த உயர்தர வகுப்புக்களை ஆரம்பித்தார். இதில் கலைப்பிரிவு வகுப்புக்களே முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இது தாய் மொழி மூலமே கற்பிக்கப்பட்டது. கலைப்பிரிவில் தமிழ், வரலாறு ஐரோப்பிய, இலங்கை வரலாறு, அரசியல், புவியியல் எனும் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. தமிழ்ப் பாடத்தை திருவாளர்.சேவற்கொடியோன், இலங்கை வரலாறு E.K.சண்முகநாதன், ஐரோப்பிய வரலாறு திருவாளர்.சோமசுந்தரம், அரசியல் திருவாளர்.சண்முகநாதன், புவியியல் திருமதி.சேதுகாவலர் ஆகிய ஆசிரியர்களால் சிறந்த

முறையில் கற்பிக்கப்பட்டது. இவர்கள் யாவரும் பட்டதாரிப்பட்டம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். சிறந்த முறையில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற்ற மையால் 1963ம் ஆண்டில் முதன்முறையாக திருவாளர்.கணேசன், செல்வி.அற்புதமலர் ராஜா, செல்வி.ஜெகதீஸ்வரி சுப்பிரமணியம் ஆகியோர் பேராதனைப் பல்கலைக்கழகம் சென்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர். 1964ம் ஆண்டு 10 பேர் வரை பேராதனைப் பல்கலைக்கழகம் சென்று பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர்.

1965ம் ஆண்டு உயர்தர வகுப்பில் **"சமஸ்கிருதம்"** என்னும் பாடம் அறிமுகம் செய்யப்பட்டது. இப் பாடம் கோப்பாய் தெற்கினை வதிவிடமாகக் கொண்ட திருவாளர்.கந்தசாமி ஆசிரியரால் கற்பிக்கப் பட்டது. இவர் சிறந்த முறையில் கற்பித்தமையால் இப்பாடத்தில் மாணவர்கள் நல்ல பெறுபேறு பெற்று பல்கலைக்கழகம் தெரிவானார் கள். திருவாளர்.கந்தசாமி ஆசிரியர் அவர்கள் சிறந்த ஆங்கிலப் புலமை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்தடுத்த ஆண்டுகளில் விடுபட்ட குறைகள் திருத்தப்பட்டு தொடர்ச்சியாக அதிகளவிலான மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றுகொண்டே இருந்தனர். 1969ம் ஆண்டு கலைப்பிரிவில் முதல் முறையாக சட்டத்துறைக்கு செல்வி.வசந்தமாலினி இராஜசிங்கம் தெரிவு செய்யப்பட்டமை பாடசாலையின் பெருமைக்கும் கல்விக்கும் சான்றாகும். அடுத்து பாடசாலையின் கல்வியில் வளர்ச்சி ஏற்பட்ட தோடு பாடங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டது. 1975ற்குப் பின்பு திரு.S.கந்தசாமி அதிபர் காலத்தில் இந்துநாகரீகம், மனைப்பொருளியல், பொருளியல் ஆகிய பாடங்கள் உயர்தர வகுப்பிலே அறிமுகம் செய்யப்பட்டன. இதனால் அதிகளவான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பினைப் பெற்றனர். அடுத்து அதிபர் ந.சிவகடாச்சம் காலத்தில் நடனம், சித்திரம், சங்கீதம்,

ஆகிய பாடங்கள் உயர்தர வகுப்பில் அறிமுகம் செய்யப்பட்டமையால் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கும், நுண்கலைப்பீடம் செல்வதற்கும், கல்வியியற் கல்லூரி செல்வதற்கும் வாய்ப்பைப் பெற்றனர். இதனால் கலைத்துறை வளர்ச்சி அடைந்தது. 2000ஆம் ஆண்டளவில் அளவையியலும், விஞ்ஞானமும் பாடமும் அறிமுகம் செய்யப்பட்டது. திரு.அகிலதாஸ் அதிபர் காலத்தில் நாடகமும், அரங்கியலும் அறிமுகம் செய்யப்பட்டது. இதனுடன் விவசாயப் பாடமும் இக்காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இதனால் கலைப்பிரிவு மாணவர்கள் தொகை அதிகரித்ததோடு மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பும் அதிகரித்தது. இக்கால அதிபர் திரு.க.இ.இராசசேகரம் காலத்தில் 2012ஆம் ஆண்டு 13 பேர் பல்கலைக் கழகமும், 10 பேர் கல்வியல் கல்லூரி செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ள னர் என்பது பாடசாலையில் கலைத்துறையின் கல்வி வளர்ச்சியை பறை சாற்றுவதாய் உள்ளது.

அடுத்ததாக வர்த்தகத்துறையை நோக்கும்போது 1983ன் கால மாற்றத்திற்கு ஏற்ப திரு.பூ.க.இராசரத்தினம் அதிபர் காலத்தில் வர்த்தகப்பிரிவு முதன் முதலில் எமது பாடசாலையில் ஆரம்பிக்கப் பட்டது. இக் காலத்தில் அதிகமான மாணவர்கள் எமது பாடசாலையில் வர்த்தகப்பிரிவில் கல்வி பயின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. திரு.சந்திரன் ஆசிரியர் அவர்கள் வர்த்தகம், கணக்கியல் ஆகிய பாடத்தையும், பொருளியல் பாடத்தை திருமதி.கனகரட்ணம் ஆசிரியர் அவர்களும் கற்பித்தனர். நான்காவது பாடமாக வர்த்தகத்தில் புவியியல் அல்லது புள்ளி விபரவியல் பாடமும் கற்கக் கூடியதாக இருந்தது என அறியக் கிடக்கிறது. எமது பாடசாலையில் கலைப் பிரிவில் இருந்து பல்கலைக்கழகம் சென்று வர்த்தகப் பட்டதாரியாக செல்வி.ஞானம்பாள் நவரத்தினராசா பேராதனையில் கற்றுப் பட்டம் பெற்றார். செல்வன்.ஜெயந்தன் அவர்கள் எமது பாடசாலையில் இருந்து ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்குத் முதல்முறை வர்த்தகப்

பிரிவுக்குத் தெரிவாகினார். தொடர்ந்து காலத்துக் காலம் வர்த்தகப் பிரிவிற்கு மாணவர்கள் பல்வேறு பல்கலைக்கழகம் தெரிவாகி வருகின்றனர்.

அடுத்து விஞ்ஞானத்துறையை நோக்கும்போது E.C.A நவரத்தினராஜா அதிபர் காலத்திலே விஞ்ஞானப்பிரிவு ஆரம்பிக்கப் பட்டது. இக்காலத்தில் விஞ்ஞானத்துறை, கணிதத்துறை ஆரம்பிக்கப் பட்டன. விஞ்ஞானத்துறையில் விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல், பௌதீகவியல் என்பன கற்பிக்கப்பட்டன. கணிதப் பிரிவில் தூய கணிதம், பிரயோக கணிதம் கற்பிக்கப்பட்டது. நீண்ட காலமாக விலங்கியலை திரு.இராசையா ஆசிரியரும், தாவரவியலை திருமதி.இராசையா ஆசிரியர் அவர்களும் கற்பித்தனர். இரசாயனவியலை திரு.பொன்னுத்துரை ஆசிரியர் அவர்களும், பௌதிகவியல், கணிதம் என்பனவற்றினை கந்தையா ஆசிரியர் அவர் களும் கற்பித்தனர். இக்காலத்தில் சிறந்த விஞ்ஞான ஆய்வுகூடம் காணப்பட்டது. இக் காலத்தில் மாணவர்கள் சிறந்த பட்டதாரி ஆசிரியர் களால் பயிற்றுவிக்கப்பட்ட போதும் செயல்முறைப் பரீட்சையில் சித்தி அடையத் தவறியமையால் விஞ்ஞானத்துறையைச் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இழந்தனர். 1970ம் ஆண்டு வரை விஞ்ஞான, கணித பிரிவு மாணவர்களுக்கு பாடங்கள் ஆங்கிலத்தில் கற்பிக்கப்பட்டமையால் இவர்கள் ஆங்கில அறிவு பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். 1970ம் ஆண்டின் பின் விஞ்ஞான, கணித பிரிவு வகுப்புப் பாடங்கள் தாய்மொழி மூலம் கற்பிக்கப்பட்டமையாலும், அத்துடன் செயன்முறைப் பரீட்சையும் தேசிய ரீதியில் நீக்கப்பட்டமையினாலும் தொடர்ந்த காலங்களில் இங்கு விஞ்ஞானத்துறையில் கல்வி கற்ற மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்லும் வாய்ப்பைப் பெற்றனர். விஞ்ஞானப் பிரிவிற்கு முதன் முறையாக ஜெயராணி சிறிஸ்கந்தராஜா அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

செல்வி.மோகனா உயிரியல்துறைக்கு யாழ்.பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகினார்.

எமது பாடசாலையில் இருந்து விவசாயபீடத்திற்கு முதலில் செல்வன்.க.நவரட்ணம் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகினார். இன்று இவர் அவுஸ்ரேலியாவில் கல்விப் பணிப்பாளராக பணியாற்றுகிறார். இவர் விஞ்ஞானமன்ற நிகழ்வுக்கு வருடம் தோறும் பணம் அனுப்புவதாகக் கூறியுள்ளார். இவர் சிறந்த **"ஹொக்கி"** விளையாட்டு வீரன் என்பது குறிப்பிடத்தக்கது.

கணிதப் பிரிவில் 1990ம் ஆண்டில் செல்வன்.பாக்கியநாதன் கேதீஸ்வரன் கணிதப் பிரிவிற்குத் தெரிவாகினார். பொறியியல் துறைக்கு கணிதப் பிரிவில் 1993ம் ஆண்டு அதிபர் முத்துக்குமாரசாமி காலத்தில் இரண்டு மாணவர்கள் தெரிவாகினார்கள். செல்வன்.தனபாலசிங்கம் உபேந்திரன், செல்வன். பாக்கியநாதன் ஸ்ரீசாயி என்போர்கள் ஆவார். தொடர்ந்து இன்று படிப்படியாக பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகுகின்றனர். 2011ஆம் ஆண்டு 4 பேர் விஞ்ஞானப் பகுதியில் பல்கலைக்கழகம் சென்றனர்.

மேலும் அதிபர் சிவகடாட்சம் காலத்தில் கணினிக் கற்பித்தல் உயர்தர வகுப்பில் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது பல்கலைக் கழகத்திற்கு செல்லும் மாணவர்கள் அதாவது கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் உள்ளவர்கள் கட்டாயம் GIT (பொதுத்தகவல் தொழில்நுட்பம்) பரீட்சைக்குத் தோற்ற வேண்டி உள்ளது. இதனால் ஆரம்பக் கணினி அறிவு வழங்கப்படுவதுடன் ஆங்கிலம், பொதுஅறிவு, ஆகிய பாடங்களுக்கு மாணவர்கள் தோற்ற வேண்டியுள்ளது. தற்போது 2013ல் உயர்தர வகுப்பில் கணினிப் பாடம் பரீட்சைக்கு ஒரு பாடமாக கற்பதற்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதனை தற்போது உயர்தர வகுப்பு பாடங்களில் இருந்து ஒரு பாடமாக

ICT என்ற ஒரு பாடத்தைத் தெரிவுசெய்து கற்கும் நிலை மாணவர் களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இவ் ஆண்டு (2013) பயிலும் மாணவர்களின் தொகை கணித, விஞ்ஞான துறை களில் குறைவாகவே உள்ளது. எனவே இக் கற்கையை ஊக்குவிக்கும் வகையில் பழைய மாணவர் சங்கம் விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆளுக்கு உதவிப் பணமாக 5000ரூபாவை வழங்கி யுள்ளது. இது எமது பாடசாலை மாணவர்கள் மத்தியில் விஞ்ஞானத் துறையில் ஆர்வத்தை அதிகரிக்க வழிகோலுவதாக அமைந்திருப்பதனைக் காணலாம்.

அண்மையில் எமது பாடசாலையில் உயர்தர வகுப்பில் கல்வி கற்ற மாணவன் செல்வன். நீர்வை ராஜ்கரன் ஆல் குறும்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு அது காட்சிப்படுத்தப்பட்டது. இது உயர்தர வகுப்பில் தான் கற்ற கல்வியை செய்முறைப்படுத்தியமை அவர் பாடத்தில் பெற்ற புலமைக்குச் சான்றாகும்.

இவ்வாறு எமது பாடசாலை ஆகிய கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி உயர்தர வகுப்புக்களான கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளில் படிப்படியாக வளர்ச்சி கண்டுள்ளதுடன் கல்வி அறிவிலும் மேலோங்கி ஒளி வீசிக் கொண்டு தனது புகழைப் பரப்பிக் கொண்டும் நிற்கின்றது. இப்போது கல்வி பயிலும் மாணவர்களாகிய நாமும், இனிவரும் மாணவ சமுதாயமும் எமது பாடசாலையை ஒழுக்கத்திலும் கல்வியிலும் மிளிரச் செய்வோமாக.

**இ. ஜெயப்பிரியா**
(13B), 2014

# எமது பாடசாலை

எமது பாடசாலை யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆகும். ஆங்கிலேயர் எமது கிராமத்திற்கு அளித்த அரும்பெரும் கொடை இப் பாடசாலையாகும். வலிகிழக்கில் அமைந்த வரலாற்றுப் புகழ்மிக்க பாடசாலை ஆகும். 1850ல் திருமதி.பிறென் அவர்களால் பெண்களுக் கான பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. தேவாலய வளவில் இயங்கிக் கொண்டிருந்த பாடசாலை 1852ல் C.M.S மிஷனரிமாரால் பொறுப்பேற் கப்பட்டது. இது ஆண்களை பெரும்பான்மையினராகக் கொண்டிருந் தது. இப் பாடசாலை ஆங்கில மொழி மூலம் கல்வியை வழங்கியது. இப் பாடசாலை ஆரம்பத்தில் தேவாலய குருவின் மேற்பார்வையில் இயங்கியது. பின்னர் சென்ஜோன்ஸ் கல்லூரி, பரிபாலனசபையின் கீழ் முகாமை செய்யப்பட்டது. சென்ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி என்பன இப் பாடசாலையின் சகோதரப் பாடசாலை யாகும். கிறிஸ்தவ கல்லூரி மேலே கூறிய இரு பாடசாலைகளுக்கும் சமமானதாக புகழ்பூத்து விளங்கியது என முன்னாள் அதிபர் V.P.செல்லையா அவர்கள் தெரிவித்திருக்கிறார். பெண்கள் பாடசாலை, ஆண்கள் பாடசாலை என்பன இரண்டும் இணைக்கப்பட்டு 1945ல் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி உருவானது.

1939ல் G.S.செல்லையா அவர்கள் பாடசாலை அதிபராகக் பெறுப்பேற்றார். அதன் பின்னர் பாடசாலை S.S.C வரை தரம் உயர்த்தப் பட்டது. 1957ல் அதிபர் E.C.A நவரட்ணராசா அவர்கள் அதிபரானார். இவர் பாடசாலையினை மேலோங்கச் செய்ய விரும்பினார். இதனால் இவர் காலத்தில் கா.பொ.த உயர்தர வகுப்பினை ஆரம்பித்தார். அதிபர் N.சிவகடாட்சம் அவர்கள் காலத்தில் எமது பாடசாலையில் கணனி விஞ்ஞானகூடம் கட்டப்பட்டது. இதனால் மாணவர்களுக்கு கணனி கல்வி வழங்கப்படுகிறது. 2013ல் கணனிக் கற்கை உயர்தர வகுப்பில் ஒரு பாடமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. **“மகிந்தோய”** சிந்தனை களுக்கு அமைவாக இன்றைய அதிபர் க.இ.இராசசேகரம் காலத்தில்

தொழில்நுட்ப ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. அதிபர் இராசசேகரம் அவர்கள் பாடசாலையின் பாதுகாப்பிற்காக பாடசாலை யின் தெற்கு மேற்குக் கரை மதிலை அமைப்பித்துள்ளார். அத்துடன் எமது பாடசாலையின் பிரதான மண்டபத்தின் மேடை புனரமைக்கப் பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு உணவு சமைத்து வழங்குவதற்காக சமையலறை அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கென அறைகள் அமைக்கப் பட்டுள்ளன. நீர்த்தாங்கி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

2012ம் ஆண்டு எமது பாடசாலை வரலாற்றில் முக்கிய காலமாகும். இக்காலத்தில் எமது பாடசாலைக்கு இணையத்தளம் வடிவமைக்கப்பட்டது. இணையத்தள முகவரி (ChristianCollege.o.r.g) இதனை 2012 பரிசளிப்பு நிகழ்வின் பொழுது யா/பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் K.கந்தசாமி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து, திறந்து சிறப்பித்தார். எமது பாடசாலையில் 2013ம் ஆண்டு தேசிய மட்டத்திற்கு மெய்வல்லுனர் போட்டிக்கு செல்வன் நா.சுமன், செல்வன்.இசைவாணன் ஆகியோர் தேசிய மட்டத்திற்குத் தெரிவாகி பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர். அத்துடன் எமது பாடசாலை மாணவர் இருவர் சாரணியத்திற்கு ஜனாதிபதி விருதினைப் பெற்றனர். இது எமது பாடசாலைக்குப் பெருமையைச் சேர்த்தது.

எமது பாடசாலை பல வழிகளில் வளர்ச்சி கண்டு வருகிறது. பல வழிகளில் வளர்ச்சி கண்ட எமது கல்லூரி கடந்த ஆண்டு தனது 160வது ஆண்டினை நிறைவு செய்தது. அதற்காக விழா ஒன்று எடுக்கப்பட்டது. அவ்விழாவினை சிறப்பிப்பதற்காக மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. பழைய மாணவர்கள் பலர் கலந்து விழாவினைச் சிறப்பித்தனர்.

**செல்வன்.பா.றொபேட் நரேஸ்**
**தரம் - 06 (பிரிவு - I)**

# கல்லூரிக் கீதம்

இராகம்: ஹம்சத்வனி

வாழிய நம் கலைக் கூடமே வாழ்க
வாழிய வாழிய வாழியவே
களனிகள் சூழ்ந்திடு கோவையம் பதியில்
விளங்கு நற் கிறிஸ்தவ கல்லூரி
உண்மையும் நேர்மையும் உவந்திட அளிக்கும்
உன்புகழ் என்றென்றும் வாழியவே. (வாழிய)

பல்புகழ் மலிந்திடும் பல பெரியோர்களைப்
படைத்து நற்பணி புரிந்தாய்
அவர் மிகு சேவையை ஏத்திட நன்னிலை
அடைந்த நல்நா டெமதே (வாழிய)

மனதினிலுன்றிறம் மதிப்பொடு நிலைத்திட
மகிழ்வோடு நாம் முயல்வோம்
கலை பல கவினுறக் கனிந்திட நல்வழி
காட்டிடு வாய் தாயே. (வாழிய)

நிலமிசை நின்புகழ் நீடு வாழ்க
நின்பணி தொடர்ந்து என்றும் வாழ்க
நிலைபெறு கலைகளின் நிறைகுடமாக
நீ யென்றும் வாழிய வாழியவே. (வாழிய)

# நன்றி நவிலல்

27.12.2013 வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமரத்துவ அதிபர் தின நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தவர்களுக்கும் சுவடு சஞ்சிகைக்கு ஆக்கங்கள் தந்தவர்களுக்கும் அச்சுப்பதித்து வழங்கிய சிவரஞ்சனம் பதிப்பகத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*நிர்வாகிகள்,*
*பழைய மாணவர் சங்கம்,*
*யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.*



சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில். 077 3068982